# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2016

**ஆண்டு: 9** **திகதி: 26 - 11 - 2016**

**ஆசிரியர்: திரு ச தேவராசா**

**நேரம் 2½ மணித்தியாலங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

**மாணவர் பெயர்:**

| வினா இலக்கம் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 10 | |
| 2 | 20 | |
| 3 | 15 | |
| 4 | 15 | |
| 5 | 20 | |
| 6 | 20 | |
| | | |

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்:

வினா 1:

**பின்வரும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வருமாறு ஆறு சொற்களுக்குக் குறையாமல் வாக்கியம் எழுதுக** (10 புள்ளிகள்)

1. படி (பெயர்) ______________________________

   படி(வினை) ______________________________

2. தை(பெயர்)______________________________

   தை(வினை)______________________________

3. பாய் (பெயர்)______________________________

   பாய் (வினை)______________________________

4. பார் (பெயர்)______________________________

   பார் (வினை)______________________________

5. ஊர் பெயர்)______________________________

   ஊர் (வினை)______________________________

6. அடிபெயர்)______________________________

   அடி (வினை)______________________________

7. மடி (பெயர்)______________________________

   மடி (வினை)______________________________

8. களி (பெயர்)______________________________

   களி (வினை)______________________________

9. நகை (பெயர்)______________________________

   நகை (வினை)______________________________

10. வழி (பெயர்) ______________________________________________

வழி (வினை) ______________________________________________

மறுபக்கம் பார்க்க!

வினா 2:

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இலக்கியம் என்றால் என்ன? என்ற வினாவுக்கு இருவகையான விடை அளிக்கப்படுகின்றது. இலக்கியம் என்ற சொல்லை இலக்கு + இயம் என்று பிரித்து குறிக்கோளை இயம்புவது அதாவது குறிக்கோளைக் கூறுவது இலக்கியமாகும் என்றும் ஒரு கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது இலக்கியமாகும் என்றும் விடை அளிக்கப்படுகின்றது. இந்த வகையில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் என்னும் நான்கையும் தமிழ் இலக்கியங்கள் என்று கூறினார்கள். பிற்காலத்தில் இந்த நான்கு வகையான ஆக்கங்களின் குறைநிறைகளை ஆராய்கின்ற திறனாய்வு என்பதையும் ஐந்தாவது இலக்கியமாகச் சேர்த்துக் கொண்டார்கள். கவிதை என்பது பாடல்களையும், சிறுகதை என்பது மிகக்குறைந்த நேரத்தில் படித்துமுடிக்கக்கூடிய குறுகிய கதையையும், நாவல் என்பது நீண்ட கதையையும், நாடகம் என்பது பரந்ததொரு உலகத்தைமேடை என்னும் வரம்பிற்குள் காட்டுகின்ற சக்திமிக்க கலையையும் குறிக்கின்றது.

தமிழ் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறுவது தமிழ் இலக்கிய வரலாறு எனப்படும். தமிழ் இலக்கிய வரலாற்றுக்காலங்களை எட்டு வகையாக வகுத்துள்ளார்கள். சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோபியர் காலம், இருபதாம் நூற்றாண்டு, இருபத்தியோராம் நூற்றாண்டு எனபனவே அவையாகும். ஒவ்வொருகாலகட்டத்தில் தோன்றிய இலக்கியங்களிலும் தனித்துவமான விசேட பண்புகளை அவதானிக்கலாம். சங்ககால இலக்கியங்களில் காதலும், போரும் விசேட பண்புகளாக இருந்தன. சங்கமருவிய காலத்தில் அறம். பல்லவர் காலத்தில் பக்தி. சோழர் காலத்தில் செழிப்பான இலக்கியங்கள். நாயக்கர் காலத்தில் வரட்சியான இலக்கியங்கள். ஐரோப்பியர் காலத்தில் நவீன இலக்கியங்கள். இருபதாம் நூற்றாண்டில் நவீன இலக்கியங்களுடன் கணினி இலக்கியங்கள். இருபத்தியோராம் நூற்றாண்டில் கணினி மயமாக்கபப்ட்ட இலக்கியங்கள் என்பன விசேட பண்புகளாக அமைந்தன.

தமிழ் இலக்கியங்களில் காலத்தால் முந்திய இலக்கிய வடிவமாக கவிதை விளங்குகின்றது. சங்க காலத்திலிருந்து நாயக்கர் காலம் வரை தோன்றிய இலக்கியங்கள் கவிதை வடிவிலேயே அமைந்திருந்தன. புலவர்கள் பனை ஓலையில் எழுத்தாணியால் ஏராளமான இலக்கியங்களை எழுதினர். ஐரோப்பியர் வருகையின் பின்பு சிறுகதை, நாவல், நாடகம் போன்ற புதிய இலக்கிய வடிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவர்கள் காகிதத்தில் அச்சடிக்கும் முறையையும் அறிமுகப்படுத்தினர். பனையோலையில் எழுதப்பட்ட எவ்வளவோ இலக்கியங்கள் கறையானால் அரிக்கப்பட்டு அழிந்துபோயின.

தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்பட்ட உ.வே சாமிநாதையர் என்பவர் பனையோலையில் எழுதப்பட்டிருந்த ஏராளமான தமிழ் இலக்கியங்களைச் சேகரித்து அவற்றை அச்சில் பதிப்பித்தார். அவருடைய முயற்சியின் காரணமாகவே இன்னும் பல அருந்தமிழ் இலக்கியங்களை நாங்கள் படித்துப் பயன் பெறமுடிகின்றது. இவ்வாறு குருத்தோலையில் எழுதப்பட்டு ஓலை காய்ந்த பின்பு காவோலையில் இருந்த தமிழ், காகித்தமிழாக மாறித் தற்போது கணினித் தமிழாக வளர்ந்து வருகின்றது.

**2.1 இலக்கியம் என்றால் என்ன? என்ற வினாவுக்குரிய இரு விடைகளையும் எழுதுக**

(2 புள்ளிகள்)

________________________________________

________________________________________

____________________________________

**2.2 தமிழ் இலக்கிய வகைகள் ஐந்தயும் வரிசைப்படுத்தி அவற்றிற்கு நேராக அவற்றின் விளக்கத்தையும் எழுதுக** (5 புள்ளிகள்)

| இலக்கியங்கள் | விளக்கங்கள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

**2.3 தமிழ் இலக்கிய வரலாறு என்றால் என்ன ? (1 புள்ளி)**

______________________________________________________________________________

______________________________________________________________________________

_______________________________________________________________________

**2.4 தமிழ் இலக்கிய வரலாற்றின் எட்டுக் காலங்களையும் ஒழுங்கு முறைப்படி எழுதி அவற்றிற்கு நேரே அக்கால இலக்கியங்களின் விசேட பண்புகளையும் எழுதுக**
(4 புள்ளிகள்)

| காலங்கள் | விசேட பண்புகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

**2.5 "இன்னும் நாங்கள் பழமையான தமிழ் இலக்கியங்களைப் படித்து இன்பம் அடைவதற்குக் காரணமானவர் உ.வே சாமிநாதையர்". இக் கூற்றை விளக்குக.**(4 புள்ளிகள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**2.6 "காவோலைத் தமிழ், காகிதத் தமிழாகி கணினித் தமிழாக வளர்ந்து வருகின்றது" . இக்கூற்றை ஆராய்க.** (4 புள்ளிகள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

வினா 3:

**பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க** (15 புள்ளிகள்)

கடந்த ஈஸ்டர் விடுமுறையின் போது அப்பாவும், அம்மாவும், அண்ணாவும், நானும் தங்கையும் அப்பாவின் மகிழுந்தில் மெல்போனில் வசிக்கின்ற சித்தப்பாவின் வீட்டிற்குப் பயணம் செய்தோம். அப்பா மகிழுந்தை மிக அவதானமாகவும், கவனமாகவும் செலுத்தினார். அம்மா அனைவருக்கும் முறுக்கு, வடை, பகோடா போன்ற சுவையான சிற்றுண்டி வகைகளைத் தந்தார். அவற்றை உண்டவாறு ஆனந்தமாகப் பிரயாணம் செய்தோம். நான் எனது பையில் கொண்டு சென்ற இனிப்புவகைகளை எல்லோருக்கும் கொடுத்தேன். அரைவாசித் தூரம் சென்றதும் ஒரு மக்டொனால்ட் உணவுச்சாலையைக் கண்டோம். அப்பா அங்கே சென்று வாகனத்தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்தினார். அப்பா எல்லோருக்கும் விரும்பிய உணவுகளை வாங்கித் தந்தார். எல்லோரும் உணவு உண்ட பின்பு மீண்டும் பிராயாணத்தைக் தொடர ஆயத்தமானோம். அப்பா நீங்கள் ஓய்வு எடுங்கள். நான் மகிழுந்தைச் செலுத்துகின்றேன் என்று அண்ணா கூறியவுடன் அப்பா சாவியை அண்ணாவிடம் கொடுத்தார். அப்பா செலுத்தும்போது ஓடிய மகிழுந்து அண்ணா செலுத்தியபோது பறந்தது. அதிவேகம் விவேகம் அல்ல. குறிக்கப்பட்ட வேக எல்லைக்கு மேல் ஓடவேண்டாம். காவலர்கள் நிற்பார்கள் என்று அப்பா அண்ணாவை எச்சரித்தார். ஆனால் அண்ணா ஏனைய வாகனங்களை முந்த வேண்டும் என்ற ஆவலினால் வேகமாக வாகனத்தைச் செலுத்தினார். நாங்களும் அந்த பேருந்தை முந்துங்கள். இந்த வாகனத்தை முந்துங்கள் என்று அவருக்கு உற்சாகமூட்டினோம். பொருட்கள் நிறைய ஏற்றிச் சென்ற மிகப்பெரிய வாகனத்தை அண்ணா முந்துவதற்கு முயன்றார். ஆனால் அதன் சாரதி எமது வாகனம் சென்ற வழித்தடத்திற்கு தனது வாகனத்தைத் திருப்பினார். விபத்தை தடுப்பதற்காக வீதியோரம் இருந்த புல்வெளிப்பக்கமாக சடுதியாக வாகனத்தைத் திருப்பினார். எமது வாகனம் தலைகீழாக புரண்டது. நாங்கள் அனைவரும் ஐயோ அம்மா என்று அலறினோம்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

வினை 4:

**பின்வரும் தொடர் வாக்கியத்திலிருந்து 15 தனி வாக்கியங்களை எழுதுக.**

(15 புள்ளிகள்)

கடந்த மார்கழி விடுமுறையில் எனது அப்பாவின் நண்பர் குடும்பத்துடன் எங்கள் வீட்டில் தங்கியிருந்தபோது முதலில் அவர்களை நகரத்திற்கு அழைத்துச் சென்ற வேளையில் அவர்கள் உலக அதிசயங்களில் ஒன்றான பாடும் வீட்டைப் பார்த்து ஆச்சரியப்பட்டு கடலுக்கு மேலாக வில்போல வளைந்திருக்கும் துறைமுகப் பாலத்தைப் பார்த்து மகிழ்ந்து பின்பு சிறிய கப்பலில் மான்லி கடற்கரைக்குப் பயணம் செய்து எல்லோரும் கடலில் குளித்து மகிழ்ந்த வேளையில் நானும், அப்பாவின் நணபருடைய மகனும் மண்கோட்டைகளைக் கட்ட அலைகள் கரையைநோக்கி வந்து மண் கோட்டைகளை அழித்த பிறகு நாங்கள் கடற்கரையில் பந்து விளையாடியதைத் தொடர்ந்து கடல் குளிப்பு முடிந்து அனைவரும் கரைக்கு வந்து நன்னீரில் நன்றாகக் குளித்தபின்பு கடும்பசி ஏற்பட்டமையால் மதிய உணவை அருந்தி முடித்ததும் கடல் வாழ் உயிரினங்களின் காட்சியகத்திற்குச் சென்று அங்கே மீன், நண்டு, ஆமை போன்ற பல்வேறு கடல் வாழ் உயிரினங்களையும் பார்த்து மகிழ்ந்ததையடுத்து தொடருந்தில் ஏறி வீடு திரும்பினோம்.

________________________________________________________________

**வினை** 5:

**ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயலாளராக உங்களை கருதிக் கொள்ளுங்கள். 2012 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ள பாடசாலையின் முப்பதாவது ஆண்டு நிறைவுக் கலைவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் திரு கிறேக் லோண்டி அவர்களுக்கு 100 சொற்களுக்கு குறையாமல் ஒரு அழைப்புக் கடிதம் எழுதுக.** (20 புள்ளிகள்)

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

வினை 6:

**பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக** (20 புள்ளிகள்)

6.1.நீங்கள் அண்மையில் பார்த்த தமிழ்த் திரைப்படம் ஒன்றின் விமர்சனம்.

6.2.தமிழ்த் தாய்மார்கள் மத்தியில் தமிழ்க் குழந்தைகளைச் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் விடுவது தீமையானது என்ற தலைப்பில் நீங்கள் ஆற்றுகின்ற உரை

6.3.உங்கள் குடும்பத்துடன் மேற்கொண்ட வெளிநாட்டுச் சுற்றுலா

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________